# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101947

1. District மாவட்டம் : Dindigul  PS: காவல்நிலையம் VAC  Year: ஆண்டு 2022  FIR No.: மு.த.அ. எண் 06/22  Date: நாள் 23.11.22

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 as amended in 2018  Sections பிரிவுகள்: 7(b)
   (ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்  Date from : நாள் முதல்  Date to : நாள் வரை 15.11.22 at 16.15 hrs 22.11.22 at 14.00 hrs
   Time Period : நேர அளவு  Time from : நேரம் முதல்  Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 23.11.22  Time : நேரம் 10.00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 23.11.22  Time : நேரம் 12.00

4. Type of Information : Written/ Oral : (Written ticked)
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS:
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 5 KM தென்கிழக்கு
   Beat Number : முறைக் காவல் எண்  (b) Address : முகவரி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம் திண்டுக்கல்
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : —  District : —
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் திரு. S. இளமுருகன்  (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் திரு. சுராத் [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு  (d) Nationality : நாட்டினம் இந்தியன்  (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள்  Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் கூலி வேலை  (g) Address : முகவரி தலையார்பட்டி, திம்மணநல்லூர் கிராமம் திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1) திரு அ.க. ஜெயபாரதி, தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர்), வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திண்டுக்கல்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

S. Elamurugu
23-11-22

[signature] 23/11/22

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

23.11.22 at 12.30 hrs.

Name: பெயர் ஜெ. ஜோதிராணி
Rank: நிலை .....................No. எண் ..........
காவல் ஆய்வாளர்
மா.கு.த.பிரிவு, [illegible]

**திண்டுக்கல் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு கு.எண்:6/2022 வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி:-**

**Column No.12, FIR Contents:-**

**பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:** திண்டுக்கல், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 23.11.2022-ம் தேதி காலை 10.00 மணிக்கு நிலையத்தில் இருந்தபோது திண்டுக்கல் மாவட்டம், திம்மணநல்லூர் கிராமம், தலையாரிபட்டியை சேர்ந்த திரு.சூரக்கவுண்டர் அவர்களின் மகன் S.இளமுருகன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று காலை 12.00 மணிக்கு கீழ்கண்டவாறு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். புகாரின் விபரம் பின்வருமாறு: அனுப்புநர்: S.இளமுருகன், S/o.திரு.சூரக்கவுண்டர், தலையாரிபட்டி, திம்மணநல்லூர் கிராமம், திண்டுக்கல் கிழக்கு வட்டம், திண்டுக்கல். பெறுநர் உயர்திரு.DSP அய்யா அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திண்டுக்கல். அய்யா, நான் மேலே கண்ட விலாசத்தில் எனது மனைவி மற்றும் இரண்டு குழந்தைகளுடன் குடியிருந்து வருகின்றேன். நான் கூலி வேலை செய்து வருகின்றேன். என்னுடைய பாட்டி திருமலையம்மாள் கடந்த 21.03.1985ம் தேதி எங்கள் ஊரிலேயே இறந்துவிட்டார். என்னுடைய பாட்டிக்கு இரண்டு மகன்கள் என்னுடைய அப்பா சூரக்கவுண்டர் மற்றும் பெரியப்பா சுப்பா கவுண்டர் ஆவார்கள். என்னுடைய பெரியப்பா இறந்துவிட்டார். எங்களது ஊரில் எனது பாட்டி பெயரில் உள்ள சொத்தை எனது அப்பா பெயருக்கு மாறுதல் செய்வது சம்மந்தமாக எனது நண்பர்களிடம் கேட்டபோது, அதற்கு எனது பாட்டியின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் வாங்கவேண்டும் எனச் சொன்னார்கள். அதற்கு வருவாய் கோட்டாச்சியரிடம் விண்ணப்பம் அளிப்பதற்காக சாணார்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் இறப்பு பதிவில்லா சான்று பெறவேண்டும் என்று எனது நண்பர் திரு.ஜெயசந்திரன் சொன்னதன் பேரில் 28.10.2021 ம் தேதி சாணார்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் மனு செய்து 1985ம் வருடம் முதல் 1990ம் வருடம் வரை இறப்பு பதிவில்லா சான்று பெற்றேன். அதன் பின்பு எனது நண்பர் திரு.ஜெயச்சந்திரன் சொன்னதன் பேரில் 50 ரூபாய் பத்திரத்தில் விண்ணப்பம் தயார் செய்து எனது பாட்டி திருமலையம்மாளின் இறப்பு சான்றிதழ் வேண்டி திண்டுக்கல் வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் 24.12.2021ம் தேதி கொடுத்தேன். அந்த

மனுவுடன் சார்பதிவாளர் அலுவலகத்தில் பெறப்பட்ட இறப்பு பதிவில்லா சான்றினையும் இணைத்து கொடுத்தேன். அப்போது அங்கிருந்த கிளார்க் இறப்பு நிகழ்ந்த ஆண்டு முதல் விண்ணப்பம் செய்யும் நாள் வரை உள்ள எல்லா வருடங்களுக்கும் இறப்பு பதிவில்லா சான்று சம்மந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர், வட்டாச்சியர் மற்றும் சார்பதிவாளர் ஆகியோர்களிடம் பெறவேண்டும் என்றும், இறப்பு சம்மந்தமாக நாளிதழில் விளம்பரம் செய்யவேண்டும் என்றும் கூறினார். எனவே நான் 06.01.2022ம் தேதி தினமலர் நாளிதழில் எனது பாட்டியின் இறப்பு சம்மந்தமாக ஏதேனும் ஆட்சேபணை இருந்தால் 15 நாட்களுக்குள் தெரிவிக்கும்படி விளம்பரம் செய்தேன். அதன் பின்பு நான் 19.01.2022ம் தேதி எனது பாட்டியின் இறப்பு பதிவு செய்யப்பட்டுள்ளதா என்று கோரி கிழக்கு வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். மேலும் அதற்கான கட்டணம் ரூ.300ஐ இ-சேவை மையத்தின் மூலம் செலுத்தி, அதன் ரசீதை வட்டாச்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். வட்டாச்சியர் அலுவலகத்தில் 2016 முதல் 2018 வரை மட்டுமே இறப்பு பதிவேடுகள் இருப்பதாகவும், அந்த பதிவேடுகளில் எனது பாட்டியின் இறப்பு தொடர்பான பதிவுகள் இல்லை என்று இறப்பு பதிவில்லா சான்று 20.01.2022ம் தேதி வட்டாச்சியர் கொடுத்தார். மேலும் 2019 முதல் 2021 வரை திம்மநல்லூர் கிராம நிர்வாக அலுவலரிடம் சான்று பெறவேண்டும் என்று கூறினார். எனவே நான் 21.01.2022ம் தேதி கிராம நிர்வாக அலுவலரிடம் சென்று 2019 முதல் 2021 வரை எனது பாட்டியின் இறப்பு தொடர்பான பதிவுகள் இல்லை என்று சான்று பெற்றேன். அன்றைய தினம் வருவாய் ஆய்வாளர் திரு.ஜெயச்சந்திரன் அவர்களும் கிராம நிர்வாக அலுவலகத்திற்கு வந்து என்னை விசாரித்தார். எனது பாட்டியின் இறப்பு சம்மந்தமாக எனது ஊரைச் சேர்ந்த மாமா பொன்ராஜ் மற்றும் ராசு ஆகியோர்களை விசாரித்தார். அதன் பின்பு சாணார்பட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் 1991 முதல் 2015 வரை இறப்பு பதிவு செய்யப்படவில்லை என்று 15.02.2022ம் தேதி ஒரு சான்று பெற்று வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து 18.05.2022ம் தேதி காலை 11 மணிக்கு என்னை விசாரணைக்கு ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பப்பட்டது. நானும் எனது அப்பா சூரக்கவுண்டரும் விசாரணைக்கு வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம் சென்றோம்.

அப்போது எங்களை தலைமை உதவியாளர் (துணை வட்டாட்சியர்) திரு.ஜெயப்பிரகாஷ் அவர்கள் விசாரணை செய்தார்கள். மேலும் அனைத்து சான்றிதழ்களையும் பரிசீலனை செய்து 1988ம் ஆண்டு மட்டும் இறப்பு பதிவில்லா சான்று விடுப்பட்டதாக தெரிவித்ததன் பேரில், அன்றைய தினமே கிழக்கு வட்டாச்சியர் அலுவலகத்தில் ஒரு விண்ணப்பம் கொடுத்தேன். மேலும் அதற்கான கட்டணம் ரூ.100ஐ இ-சேவை மையத்தின் மூலம் செலுத்தி, அதன் ரசீதை வட்டாச்சியர் அலுவலகத்தில் கொடுத்தேன். அதன்பின்பு கடந்த 5 மாதங்களாக வருவாய் கோட்டாச்சியர் அலுவலகத்திலிருந்து எந்த தகவலும் கிடைக்காததால் நான் 15.11.2022ம் தேதி மாலை சுமார் 4.15 மணிக்கு வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம் சென்று தலைமை உதவியாளர் (துணை வட்டாச்சியர்) திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களை சந்தித்து எனது பாட்டியின் இறப்பு சான்றிதழ் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் சான்றிதழ் ரெடியாக உள்ளது எனவும், பணம் ரூ.5,000/-ம் கொடுத்துவிட்டு சான்றிதழை பெற்றுச் செல்லுங்கள் எனவும் கூறினார். அதற்கு நான் இந்த பணம் அரசாங்கத்திற்கு கட்ட வேண்டிய பணமா எனக் கேட்டேன். அதற்கு அவர் உங்களுக்கு இந்த சான்றிதழ் கிடைக்க ஏற்பாடு செய்ததற்காகவும், அதை கொடுப்பதற்காகவும் எனக்கு கொடுக்க வேண்டிய பணம் எனக் கூறினார். நான் தற்போது என்னிடம் பணம் இல்லை எனவும், ஏற்பாடு செய்துவிட்டு வருவதாக சொல்லிவிட்டு வந்துவிட்டேன். பின்பு ஒரு வாரம் கழித்து 22.11.2022ம் தேதி மதியம் சுமார் 2 மணிக்கு வருவாய் கோட்டாச்சியர் அலுவலகம் சென்று தலைமை உதவியாளர் (துணை வட்டாச்சியர்) திரு.ஜெயப்பிரகாஷ் அவர்களை சந்தித்து எனது பாட்டியின் இறப்பு சான்றிதழ் சம்மந்தமாக கேட்டேன். அதற்கு அவர் நான் கேட்ட பணம் ரூ.5,000/-ம் கொண்டு வந்துள்ளீர்களா எனக் கேட்டார். என்னால் அவ்வளவு பணம் புரட்ட முடியவில்லை எனக் கூறினேன். மேலும் கொஞ்சம் குறைத்துக் கொள்ளுங்கள் எனக் கேட்டேன். அதற்கு அவர் சரி ரூ.3,000/-ம் நாளை மாலை கொண்டு வந்து என்னிடம் கொடுத்துவிட்டு, சான்றிதழை வாங்கிக் கொள்ளுங்கள் எனக் கறாராக கூறினார். நான் வீட்டிற்கு சென்று யோசனை செய்ததில் எனது பாட்டியின் இறப்பு சான்றிதழை லஞ்சம் கொடுத்து பெறுவதற்கு விருப்பமில்லாததால், என்னிடம் ரூ.3,000/- லஞ்சமாக கேட்ட திரு.ஜெயப்பிரகாஷ், தலைமை உதவியாளர் (துணை வட்டாச்சியர்) அவர்கள் மீது நடவடிக்கை எடுக்க

கேட்டு இந்த புகார் கொடுக்கிறேன். வருவாய் கோட்டாச்சியர் திண்டுக்கல் அலுவலகத்திலிருந்து 18.05.2022ம் தேதி என்னை விசாரணைக்கு வரச்சொன்ன அழைப்பாணையை இத்துடன் இணைத்துள்ளேன். மேலும் திரு.ஜெயப்பிரகாஷ் லஞ்சமாக கேட்ட பணம் ரூ.3,000/- கொண்டு வந்துள்ளேன், நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். Sd/- xxxx (S.இளமுருகன், 23.11.2022)

Sir, Received the complaint on 23.11.2022 at 10.00 Hrs. A confidential verification has been conducted in respect of the complaint through sources. Complaint was found to be genuine and reputation of the accused is found to be bad. Hence, after getting oral permission from the Superintendent of Police, Southern Range, I am registering a case in Dindigul V&AC Cr.No.06/2022, u/s. 7(b) of P.C Act 1988, as amended by the PC (amendment) Act 2018, on 23.11.2022 at 12.00 hrs and took up investigation. Sd/-xxxxx (J.Rupa Geetharani, Inspector of Police, V&AC, Dindigul, 23.11.2022).

Original FIR along with written complaint of Tr.S.Elamurugan, S/o.Sooragounder, Thalaiyaripatty, Thimmananallur Village, Dindigul East Taluk, Dindigul District and with the relevant documents are submitted to the Chief Judicial Magistrate/Special Judge, Dindigul and copy of the FIR is submitted to the Director, Vigilance and Anti Corruption, Chennai.

JRupa 23/11/22

(J.Rupa Geetharani)
Inspector of Police,
Vigilance & Anti-Corruption,
Dindigul.